பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 16 வியாழக்கிழமை 30.06.2022 கதிர் 237

**இனி இது ரகசியம் அல்ல!**

நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து நிமிர்வதில் நம் மக்கள் அசகாய சூரர்கள். யுத்த காலத்தை முகம்கொடுத்த அவர்களின் தீரம் அத்தகையது. வியப்பு மிக்கது.

டீசலுக்கு அரசு தடையா? மண்ணெண்ணையையும் வெஜிட பிள் ஒயிலையும் ☞2

# நிலைமை மிகமோசம்; பொறுமை வேண்டும்!

## ஜூலை 22ஆம் திகதியே பெற்றோல் கப்பல் வரும்

### ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பில் பிரதமர் ரணில் கவலையுடன் தெரிவிப்பு



இலங்கையில் எரிபொருள் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணவே முடியாது. அந்தளவுக்கு நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. எதிர்வரும் ஜூலை 22ஆம் திகதிதான் பெற்றோல்தாங்கியகப்பல்ஒன்றுநாட்டைவந்தடையவுள்ளது. எனவே, மக்கள் பொறுமை காக்க வேண்டும்.

– இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடகங்க ளிடம் தெரிவித்தார். ☞2

## அரச காணி அபகரிப்புக்கு எதிராக கல்முனையில் மக்கள் கவனவீர்ப்பு



(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட அரச காணிக்குள் தனியார் ஒருவர் அத்துமீறி நுழைந்து கட்டுமான வேலைகளை ☞4

## ‘ஒரே நாடு, ஒரே சட்டம்’ செயலணியின் இறுதி அறிக்கை ஜனாதிபதியின் வசம்!



‘ஒரே நாடு, ஒரே சட்டம்’ ஜனாதிபதிசெயலணியின் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

செயலணியின் தலைவர் வண. கலகொட அத்தே ஞானசார தேரரால் இது ☞2

## ஐ.ஓ.சி. மூலம் எரிபொருள் கிடைத்தால் தொடர்ந்தும் விநியோகம் இடம்பெறும்!

### மேலதிக அரச அதிபர் பிரதீபன் தெரிவிப்பு



(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜூன் 30

ஐ.ஓ.சி. நிறுவனத்தினால் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு எரிபொருள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில், தொடர்ந்தும் அத்தியாவசிய சேவையினருக்கும் பொதுமக்களுக்கும் எரிபொருள் விநியோகம் இடம்பெறுமென யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

தற்போதைய ☞4

## ஜப்பான் தூதுவரை யாழ் மேயர் நூலகத்தில் வரவேற்றுப் பேச்சு



(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜூன் 30

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி நேற்றைய தினம்யாழ்ப்பாணம் பொதுசன ☞2

## செருப்பாலும் சாணியாலும் மலத்தாலும் மக்கள் அடித்து விரட்ட வேண்டி நேரிடும்

### எச்சரிக்கின்றார் கல்முனை விகாராதிபதி



“இந்த ஜனாதிபதியை எந்த மக்கள் தெரிவு செய்தார்களோ அதே மக்கள் அதே நபரை வீட்டுக்குப் போ என்று இவ்வளவு தூரம் சொல்லியும் இன்னமும் அவர் போகவில்லை. அதற்கு முட்டுக் கொடுக்க வந்த பிரபல நடிகர் ரணில் இதுவரை சாதித்தது ஏதுமில்லை. அவரை எந்த மக்களும் தெரிவு செய்யவில்லை. தெரிவு செய்யாத ஒருவரை பிரதமராக்கியது ஜனாதிபதியின் முதல் முட்டாள்தனம்.

இந்த நிலை ☞2

## 10 முதல் 15 மணி நேர மின்வெட்டு வரலாமாம்!

இலங்கையில் எதிர்வரும் நாள்களில் 10 முதல் 15 மணித்தியாலங்கள் மின் வெட்டை நடைமுறைப்படுத்த நேரிடலாம் என மின் பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகமொன்றுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகிறது என்றும், நீர் மின் உற்பத்தி நிலையங்களில் ☞2

## இனியும் பொறுக்கேன்! வடக்கு ஆளுநர் சீற்றம்

### மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைக்காத அமைச்சுக்கள், திணைக்களங்கள் மீது அவர் காட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 30

பொதுமக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரால் வடக்கு மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களுக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் கோரிக்கை தொடர்பில் இதுவரை தீர்வுகளை முன்வைக்காத அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இனியும் பொறுமை காக்க மாட்டேன் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார். ☞2

## கந்தக்காட்டில் தப்பியோடிய 232 பேர் இதுவரைக் கைது!




கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் இருந்து தப்பியோடிய 200க்கும் மேற்பட்டோரை தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு தப்பிச் சென்ற 232 கைதிகள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐந்துக்கு ஒன்று என்ற விகிதத்தில் கலக்க டீசல் தயார். அதை வைத்துக்கொண்டு தமிழ் மண் எங்கும் அநாயசமாக பாரவூர்திகளை ஓட்டித் திரிந்தவர்கள் நாங்கள். ஜெனரேட்டர்களை வருடக் கணக்கில் வெற்றிகரமாக இயக்கியவர்கள் நாங்கள்.

பெட்ரோலுக்கும் தடையா? மண்எண்ணையில் மோட்டார் சைக்கிள், ஓட்டோ ஓடியவர்கள். என்ன ஸ்டார்ட்டுக்கு மட்டும் சூப்பி போத்தலில் இருக்கும் இந்துணூண்டு பெட்ரோலில் ஓரிரு துளிகளைக் காபரேட்டருக்குக் காட்டி காட்டியே மோட்டார் சைக்கிளில் தமிழ் மண் எங்கும் தாராளமாக சவாரி செய்தவர்கள். இந்தத் தலைமுறைக்கு அவை புதிய விடயங்களாக இருக்கலாம். ஆனால் நம் பழைய தலைமுறை அதில் நன்கு பழக்கப்பட்டது.

எனினும் அந்தக் கண்டுபிடிப்புகள் எல்லாம் இப்போதைய நெருக்கடிக்குச் சரிப்பட்டு வரா ஏனென்றால் யுத்த காலத்தில் பெட்ரோல், டீசலுக்குத் தடை விதித்த அரசு, மக்களின் வீட்டு பாவனைக்கும் குப்பி விளக்குகள் எரிக்கவும் மண்எண்ணையை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாவது அனுமதித்து இருந்தது. ஆனால் இப்போது மண் எண்ணைக்கும் தட்டுப்பாடு. அதற்காக நம்மவர்கள் என்ன சுருண்டு விடுவார்களா?

'தேவைதான் கண்டுபிடிப்புகளின் தாய்' (necessity is the mother of invention) என்று நீதியரசர் விக்னேஸ்வரன் நேற்று கூறியிருந்தமைபடி, தங்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டார்கள் நம்வர்கள்.

இனி, இது தொடர்பில் நமது செய்தியாளர் ந.லோகதயாளன் தந்த செய்தியைப் பார்ப்போம். செய்தி இதுதான்:-

"எரிபொருள் இன்மையால் ரின்னர், ரேப்பன்ரைனைக் கலந்து ஓட்டோக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை செலுத்தும் அவலம் இடம்பெறுகின்றது.

குடாநாட்டில் தற்போது பெற்றோலை பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் மாற்று எரி சக்திகள் மூலம் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோக்கள் இயக்கப்படுகின்றன.

இதற்காக இரண்டுலீற்றர்ரின்னருடன் ஒரு லீற்றர் ரேப்பன்ரைன் என்ற அடிப்படையில் பயன்படுத்தப்படுகின்றது. அப்படியான கலவைக்கு ஒரு லீற்றருக்கு சுமார் ஆயிரத்து நூறு ரூபா வரை செலவாகிறது.

அளவெட்டியில் வசிக்கும் 63 வயதையுடைய நாகதேவன் கருத்து தெரிவிக்கையில் -

'கடந்த 40 ஆண்டுகளாக அளவெட்டியில் இருந்து யாழ். நகர் முழுவதும் பால் விநியோகம் செய்வதே எனது முழுமையான தொழில். என்போன்று 15 இற்கும் மேற்பட்டோர் இதனையே தொழிலாகச் செய்கின்றனர். இன்று நாட்டின் கொடிய பொருளாதார நெருக்கடி காரணமாக பெற்றோலைக் காணவே முடியவில்லை. இதனால் ரின்னரிலேயே தற்போது மோட்டார் சைக்கிள் ஓடுகின்றேன்' என்றார்."

- இதுதான் செய்தி. இனி என்ன? ரின்னர் மற்றும் ரேப்பன்ரைன் விலை எகிறும். அவையும் காணமுடியாத பொருள்களின் பட்டியலில் சேர்ந்து விடும். அவ்வளவுதான்.

– மின்னல் –

## செருப்பாலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீடித்தால் அதே மக்கள் செருப்பாலும் சாணியாலும் மலத்தாலும் அடித்து விரட்ட வேண்டி நேரிடும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன் .

- இவ்வாறு கல்முனை சுபத்திராராமய விகாராதிபதி வண ரண்முத்துக்கல சங் கரத்ன தேரர் தெரிவித்தார் .

சமகால நெருக்கடி நிலைமை தொடர்பாக அவர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று மைதானத்தில் விளையாட வேண்டிய இளைஞர்கள் - சந்தோஷமாக வாழ்க்கையை கழிக்க வேண்டிய இளைஞர்கள் - பெட்ரோலுக்கும் டீசலுக்கும் எரிவாயுவுக்கும் நாள்கணக்கில் வரிசையில் நின்று கொண்டிருக்கின்றார்கள் .

அரசாங்கம் மோசமான ஒரு நிர்வாகத்தை செய்ததன் காரணமாக இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

எழில் மிகுந்த இந்த நாடு சீரழிந்து கொண்டிருக்கிறது. இதற்கு யார் காரணம் என்பதை உலகமே அறியும்.

மக்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள். சிங்கள மக்கள் சந்தோசமாக சுற்றுலா சென்றவர்கள், இப்போது நின்று நடு வீதியிலே படுத்துக் காலத்தைக் கடத்துகிறார்கள்.

மக்களை பிச்சைக்காரனாக மாற்றி, தாங்கள் கடவுளாக இருக்கலாம் இருக்கலாம் என்று சிலர் நினைக்கிறார்கள்.

கடந்த கால யுத்தத்தை விட மோசமானது இன்றைய பொருளாதார நெருக்கடி நிலை. அந்தப் பாரிய யுத்தத்தின் பொழுது கூட இப்படி நீண்ட வரிசைகள் இருக்கவில்லை. இன்றைய நெருக்கடி இருக்கவில்லை. அன்று பயத்தின் மத்தியிலும் மக்கள் சந்தோமாக வாழ்ந்தார்கள்.

மதத் தலைவர்களுக்கு என்று ஒரு மரியாதை கூட இல்லை. மேடையிலே மாத்திரம் நான்கு மதத் தலைவர்களை அழைக்கிறார்கள்

இங்கு பெட்ரோல் நிலையங்களிலும் சரி, ஏனைய இடங்களிலும் சரி ஒரு மருந்துக்கு கூட அந்த மரியாதையை காணவில்லை.

அவர்களுக்கான முன்னுரிமையை காணவில்லை. இனிமேல் கொண்டு பொது வைபவங்களில் மதத் தலைவர்களை ஒப்புக்காக அழைப்பதை நிறுத்துங்கள்.

மக்கள் இன்று மிக மோசமாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். சாப்பாட்டுக்கு வழியில்லாமல் தினமும் க்யூவில் நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை.

4 அல்லது 5 நாள்கள் தொடர்ச்சியாக பெற்றோலுக்காக வரிசையில் இருக்கின்ற கவலைக்கிடமான நிலை. தீர்வுக்கு ஒரே வழி கோட்டா வீடு போக வேண்டும். ரணில் வீடு செல்ல வேண்டும். இந்த அரசாங்கம் தேவையில்லை. மக்கள் ஒரு தேர்தலை விரும்புகிறார்கள்.

நாட்டை நாங்கள் காப்பாற்றுவோம். நீங்கள் வீட்டிற்கு செல்லுங்கள்.

மக்கள் அடிமைகளாக வாழவேண்டும், மனநோயாளிகளாக மாறவேண்டும் என்று நினைக்கின்றார்கள். நாடாளுமன்றத்தில் இருக்கக்கூடிய 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெளியேற வேண்டும். மக்களைப் பற்றி சிந்திக்கின்றவர்கள், களவெடுக்காதவர்களை நாம் தெரிந்து நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் .

யாரும் எமக்கு தேவையில்லை. அரசாங்கம் உடனடியாக பதவி விலகி புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தி உலக நாடுகளின் உதவியை பெற்று பீனிக்ஸ் பறவை போல மீண்டும் அழகான எமது நாடு செழிக்க வேண்டும் இதுவே எனது அவா மக்களுக்கு உதவுங்கள். இந்த இக்கட்டான காலகட்டத்தில் புண்ணியம் கிடைக்கும். என்றார்.

## நிலைமை மிக மோசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதமர் நேற்றுப் பிற்பகல் தேசிய பத்திரிகைகள் மற்றும் தேசிய தொலைக்காட்சிகளின் ஆசிரியர்கள் மற்றும் செய்திப் பணிப்பாளர்களைச் சந்தித்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை, எரிபொருள் நெருக்கடியை எதிர்கொள்ள எடுக்கப்பட்டு வரும் அவசர நடவடிக்கைகள் உள்ளிட்டவை குறித்து இதன்போது ஊடகங்களுக்கு விளக்கினார்.

பிரதமரின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.சமரதுங்கவும் பொருளாதார நிலைமை மற்றும் பொருளாதாரம் இந்த ஆபத்தான நிலையை அடைந்தது குறித்து ஊடகங்களுக்கு விளக்கமளித்தார்.

நாட்டின் எரிபொருள் நிலைமையின் தற்போதைய நிலை குறித்து பிரதமரின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஊடகங்களுக்கு விளக்கமளித்தார்.

இந்தச் சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 15ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியிலே டீசல் தாங்கிய கப்பல் ஒன்று நாட்டை வந்தடையவுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் 11 ஆயிரம் மெட்ரிக் டன் டீசலே கையிருப்பில் உள்ளது.

அத்துடன் 5 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கும் குறைவான பெற்றோலே கையிருப்பில் உள்ளது.

இவ்வாறான பின்னணியில், மீண்டும் 38 ஆயிரம் மெட்ரிக் டன் டீசல் தாங்கிய கப்பல் எதிர்வரும் 11 முதல் 15 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நாட்டை வந்தடையவுள்ளது.

அத்துடன் 35 ஆயிரத்து 300 மெற்றிக் டன் பெற்றோல் தாங்கிய கப்பல் ஒன்று எதிர்வரும் ஜூலை 22 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளது - என்றார்.

## கந்தக்காட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் கைதி ஒருவர் உயிரிழந்தமையால் நேற்று முன்தினம் இரவு முதல் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்றுக் காலை சுமார் 600 கைதிகள் புனர்வாழ்வு மையத்தின் இரண்டு பிரதான வாயில்களை உடைத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் கைதி ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட்டு வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மரணம் தொடர்பில் யாரேனும் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டால் அவருக்கு உரிய தண்டனை வழங்கப்படும் என மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

## 'ஒரே நாடு, ஒரே சட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கையளிக்கப்பட்டுள்ளது.

'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற 13 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணியானது 2021 ஒக்டோபர் 26 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த செயலணியின் தலைவராக வண.கலகொடே அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 10 முதல் 15 மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உரிய முறையில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படாவிட்டால் இந்த நிலை உருவாகும் எனவும் அவர் எச்சரித்தார்.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் ஒரு பகுதி திருத்தப்பணிகளுக்காக மூடப்பட்டுள்ளது.

இதனால் 270 மெகாவோட் மின்சார உற்பத்தி தடைப்பட்டுள்ளது.

எரிபொருள் பிரச்சினையால் மேலும் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

உரிய முகாமைத்துவம் இன்றி நீர் மின் உற்பத்தி செய்தால், நீர் மட்டம் குறைந்து, தற்பொழுது உற்பத்தி செய்யும் அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமல் போகும்.

மின்சார உற்பத்தி தொடர்பில் நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது.

இந்த நிலையில் அனைத்து தரப்பினரும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தாமை பாரிய சிக்கல்களை உருவாக்கியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஜப்பான் தூதுவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நூலகத்திற்கு விஜயம் செய்தார்.

நேற்று மதியம் 2 மணியளவில் நூலகத்துக்கு விஜயம் செய்த தூதரை மாநகர முதல்வர் மணிவண்ணன் மாலை அணிவித்து வரவேற்று அங்கு சந்தித்துப் பேசினார்.

நூலகத்தை பார்வையிட்ட ஜப்பான் தூதுவருக்கு நூலகத்தின் ஒவ்வொரு பகுதிகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது. வரலாற்று விடயங்கள் தொடர்பாகவும் கூறப்பட்டது.

விசேடமாக அங்கு காணப்பட்ட ஜப்பானிய மொழி நூல்களை அவர் பார்வையிட்டார்.

இதன்போது யாழ் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணப் பொதுசன நூலக பிரதம நூலகர் மற்றும் நூலக அலுவலர்கள் தூதுவருக்கான விளக்கத்தை வழங்கினர்.

# அவசர வழக்குகள் மட்டும்தாம் இனி உயர்நீதிமன்றில்

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொது மக்களுக்கு எரிபொருள் வழங்குவதில் கட்டுப்பாடுகள் நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, திறந்த நீதிமன்றத்தில் 'அவசர வழக்குகள்' மட்டுமே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று உயர்நீதிமன்றம்,அறிவித்தது.

## இனியும் பொறுக்கேன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றைய தினம் புதன்கிழமை ஆளுநர் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் பொதுமக்கள் சேவையை அமைச்சர்கள் மாற்றும் திணைக்களங்கள் உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும்.

அமைச்சர்கள் மற்றும் திணைக்களங்களில் பொதுமக்கள் தமது தேவையைத் திருப்திகரமாக பெற்றுக் கொள்ளாமை மற்றும் அமைச்சுக்கள் திணைக்களங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் மற்றும் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் தொடர்பிலும் என்னிடம் பல முறைப்பாடுகள் நேரடியாக கிடைக்கப் பெற்றன.

அவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் சிலவற்றுக்கு இதுவரை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்காமை தொடரில் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அரச சுற்று நிருபங்களுக்கு அமைவாக முறைப்பாடு வழங்கும் நபர் ஒருவருக்கு உரிய காலப் பகுதியில் தீர்வை முன்வைக்க வேண்டியது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கடமையாகும்.

அரச நிர்வாகம் பொது மக்களின் தேவைகளை இலகுபடுத்துவதற்காக கட்டியமைக்கப்பட்ட ஸ்தாபன அமைப்பாக காணப்படுகின்ற நிலையில் அதன் ஊடாக பொதுமக்களின் தேவைகள் நிறைவேற்றப்படும் போதே குறித்த ஸ்தாபனம் மக்களின் நம்பிக்கையை வென்றதாக அமையும்.

வட மாகாணத்தில் செயற்பாடின்றி மக்களை சிரமத்துக்கு உள்ளாக்கும் எந்த ஒரு நிர்வாக கட்டமைப்பையும் ஆளுநர் என்ற நீதியில் அனுமதிக்கப் போவதில்லை.

ஆகவே தான் வடக்கு மாகாணத்தில் இதுவரை அமைச்சுகள், திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் தீர்வு முன் வைக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டேன்.- என அந்த அறிக்கையில் ஆளுநர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# இந்தியக் கரிசனை

இலங்கை நெருக்கடியை ஒட்டி இலங்கை மக்கள் படுகின்ற, படப்போகின்ற கஷ்டங்கள், துன்ப, துயரங்கள், அவலங்கள் குறித்து இலங்கை அரசு கவலை கொள்ளுகின்றதோ இல்லையோ, அயல் தேசமான – மூத்த அண்ணனான – இந்தியா கவலையும், சிரத்தையும் கொண்டிருக்கின்றது என்பது அதன் இரு முக்கிய பிரதிநிதிகளின் கருத்து வெளிப்பாடுகள் ஊடாகத் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது. அது கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

பொருளாதார நெருக்கடி மோசமான கட்டத்தை எட்டியிருக்கின்றது. இந்தக் கட்டத்தில் எரிபொருள், உரம் போன்ற அத்தியாவசிய உதவிகளை எல்லாம் இலகு கடன் வசதியில் விரைந்து வழங்கியது இந்தியா. கடந்த மூன்று மாதங்களாக இலங்கை மக்கள் பெருமூச்சு விட்டுப் பிழைத்தார்கள் என்றால் அதற்கு முக்கிய – பிரதான – காரணம் 'இடுக்கண் களையும் நட்பு போல' இந்தியா விரைந்து வந்து உதவியமைதான். எவரும் மறுக்க முடியாத உண்மை இது.

ஆனாலும், எவ்வளவு காலத்துக்கு அயல்தேசமான இந்தியா வாரிக் கொட்டிக் கொண்டிருக்க முடியும்? அதன் உதவிகளுக்கும் எல்லைகள், மட்டுப்படுத்தல்கள் உண்டு.

தொடர்ந்து இந்திய உதவியை எதிர்பார்த்துக் கொண்டு இலங்கை தேசம் காலத்தை ஒட்டக் கூடாது. ஒட்டவும் முடியாது.

ஆனால், கொழும்பு ஆட்சிப் பீடம் நாட்டை சுயத்தில் – சொந்தக் காலில் – நிலை நிறுத்தும் நடவடிக்கைகளை எடுக்கவேயில்லை.

ஏற்கனவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உர இறக்குமதி தொடர்பான முட்டாள்தனமான முடிவினால் நாட்டின் விவசாயத்துறையே சீரழிந்து விட்டது. இந்தச் சிறுபோகத்துக்கும் உரிய காலத்தில் உரம் கிட்டப்போவதில்லை. உரமின்றி விளைவிக்கப்பட்ட வயல்களில் அறுவடை வெட்டவும், அடுத்த பெரும்போகத்துக்கு முன் நிலத்தை உழவும் டீசல் இல்லை. அதனால் விளைந்த கதிர்கள் கூட கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத அவல நிலைமையை நாடு எதிர்நோக்கி நிற்கின்றது.

இந்தப் பின்புலத்தில்தான் அடுத்து வரும் மாதங்களில் நாட்டில் பட்டினிச்சாவு நேரத் தொடங்கும் என எதிர்வுகள் கூறப்படுகின்றன.

இந்த ஆபத்து ஏது நிலை குறித்து, கொழும்பு ஆட்சிப் பீடத்தினர் கவலை கொண்டிருக்கின்றார்களோ இல்லையோ புதுடில்லி ஆட்சிப்பீடம் சிரத்தை கொண்டிருக்கின்றது என்பது தெளிவு. இலங்கையில் பட்டினிச் சாவு நேர இந்தியா இடமளிக்காது என்ற கருத்து நிலை இந்தியாவின் இரண்டு மட்டங்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஒருவர் – இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. ஜேர்மனியில் ஜி7 நாடுகளின் கூட்டத்தில் உரையாற்றிய இந்தியப் பிரதமர் "இலங்கையின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருகின்றது" – என்று அறிவித்திருக்கின்றார்.

அதேநேரம் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே "(இலங்கை) அரசு, வருடாந்தம் இலங்கைக்குத் தேவைப்படும் உணவு வகைகளின் விவரப்பட்டியலைத் தருமானால், பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும்போது, அத்தகைய தேவைகளை நிறைவு செய்யும் விதத்தில் முன்னுரிமை அளித்து இந்தியா செயற்படும்" – என்று கூறியிருக்கின்றார்.

– இவை இலங்கை என்ன நெருக்கடியை எதிர்கொண்டாலும் பட்டினிச்சாவு நேராமல் பார்ப்பதில் இந்தியக் கரிசனையை உறுதிப்படுத்தும் தகவல்கள் தாம். இதைத் தானோ 'தானாடா விட்டாலும் சதையாடும்' என்பது...!

# நாணய நிதியத்துடனான பேச்சுகளை மக்கள் போராட்டங்கள் பாதிக்கா!

## சிரேஷ்ட பொருளியலாளர் சாந்த தேவராஜன் தெரிவிப்பு



இலங்கை மக்களின் போராட்டங்களால் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் பாதிக்கப்படப்போவதில்லை.

ஏனெனில் இந்த விடயத்தில் இருதரப்பினரதும் எதிர்பார்ப்புக்கள் ஒத்ததவையாகவே காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டியிருக்கும் தெற்காசியா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கப் பிராந்தியங்களுக்கான உலக வங்கியின் முன்னாள் சிரேஷ்ட பொருளியலாளர் சாந்த தேவராஜன், தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் பாரிய பொருளாதார நெருக்கடிக்கும், அரசாங்கத்தால் பின்பற்றப்பட்டுவந்த பொருளாதாரக் கொள்கைகளுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு தொடர்பாக மக்கள் நன்கு அறிந்திருக்கின்றார்கள் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

தற்போது நாடளாவிய ரீதியில் பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஆர்ப்பாட்டங்கள் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறப்படும் கருத்து சரியானதா என்பது தொடர்பாக விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

மக்களின் போராட்டங்கள் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளைப் பாதிக்கும் என்று கூறப்படும் கருத்து ஏற்புடையதன்று. உண்மையில் அதற்கு மாறான விடயங்களே இடம்பெறும்.

ஏனெனில் எகிப்து, துருக்கி போன்ற நாடுகளைப் பொறுத்தமட்டில், அந்நாடுகளின் அரசாங்கங்கள் உதவிகோரி சர்வதேச நாணய நிதியத்தை நாடியதன் பின்னரே அதற்கு எதிராக மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடினார்கள். ஆனால் இங்கு சர்வதேச நாணய நிதியத்தின் எதிர்பார்ப்பும் மக்களின் எதிர்பார்ப்பும் ஒத்ததவையாகக் காணப்படுகின்றன.

அதேபோன்று இன்றளவிலே நாடளாவிய ரீதியில் வீதிகளில் இறங்கிப்போராடும் மக்கள் அத்தியாவசியப்பொருள்களுக்கான தட்டுப்பாடு உள்ளடங்கலாக நாடு முகங்கொடுத்திருக்கும் பாரிய பொருளாதார நெருக்கடிக்கும், அரசாங்கத்தால் பின்பற்றப்பட்டுவந்த பொருளாதாரக்கொள்கைகளுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு தொடர்பாகத் தெளிவாக அறிந்திருக்கின்றார்கள்.

கடந்த 2020 ஆம் ஆண்டில் வரி அளவீடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம், போதிய வெளிநாட்டுக்கையிருப்பு இல்லாதபோதிலும் வெளிநாட்டுக்கடன்களைத் தொடர்ந்து செலுத்துவதற்கு மேற்கொண்ட தீர்மானம், அதிகளவிலான நாணயத்தாள்களை அச்சிட்டதன் மூலம் பணவீக்கம் மற்றும் பணப்பெறுமதி வீழ்ச்சி என்பவற்றுக்கு வழிகோலியமை என்பனவே தற்போதைய அத்தியாவசியப்பொருள் தட்டுப்பாட்டு நெருக்கடிக்கான பிரதான காரணங்களாகும்.

ஆகவே, தற்போது பேசப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டம் இந்தக் கொள்கைகளை மீளப்பெறுவதற்கான செயற்திட்டமாகும். அதுமாத்திரமன்றி பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு அவசியமான கொள்கைகளை உள்வாங்குவதற்கு மிகச்சரியான தருணம் இதுவாகும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

---

## அரச காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

செய்து அபகரிக்கும் முயற்சியைக் கண்டித்து நேற்று புதன்கிழமை பொதுமக்கள் ஒன்று திரண்டு அங்கு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனை மகளிர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் பொதுமக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் கட்டிடம் அமைக்கும் பணியைத் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தியமையுடன் நீதிமன்றத்துக்கு இந்த விடயத்தை எடுத்து செல்வார்கள் எனவும் கூறியமையைத் தொடர்ந்து மக்கள் கலைந்து சென்றனர்.

தொடர்ச்சியாக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வருவது இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் எனக் கூறப்படுகிறது.

கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கல்முனை 01 ஈ பிரிவில் உள்ள இந்த அரச காணியில் இங்கு மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்கும்.

இக்காணியில் தனியார் ஒருவர் கட்டடம் கட்ட முற்பட்ட வேளையில் முன்பும் அங்கு முறுகல் நிலை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

## ஐ.ஓ.சி. மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ்ப்பாண மாவட்ட எரிபொருள் விநியோகம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேலதிக அரசாங்க அதிபர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு ஐ.ஓ.சி. விற்பனை நிலையத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற பெற்றோல் நேற்று விநியோகம் செய்யப்பட்டது. இது ஏற்கனவே இராணுவத்தினரால் வழங்கப்பட்ட டோக்கன் முறைக்கேற்ப டோக்கனை பெற்றுக் கொண்ட அனைவருக்கும் யாழ்ப்பாணம் ஐ.ஓ.சி. நிறுவனத்தின் மூலம் பெற்றோல் வழங்கப்பட்டது.

அதற்கு மேலதிகமாக தற்போது பத்தாம் திகதி வரை அத்தியாவசிய சேவையில் ஈடுபடுகின்றவர்களுக்கு எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தால் அதற்கு மேலதிகமாக அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்களுடைய சிபாரிசின் அடிப்படையில் அவர்களுக்கும் எரிபொருள் வழங்கப்படுகிறது.

அதற்கு மேலதிகமாக பொதுமக்கள் தங்களது கோரிக்கைக்கேற்ப எரிபொருள் வழங்குமாறு கூறியிருந்தார்கள். அதற்கேற்ப ஐ.ஓ.சி. நிறுவனத்தின் மூலம் ஓரிடத்திலே வைத்து பொதுமக்களுக்கும் மற்றொரு இடத்தில் வைத்து அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

தொடர்ந்து ஐ.ஓ.சி. நிறுவனத்தினால் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு எரிபொருள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில்,தொடர்ந்து இதே நடைமுறையில் அத்தியாவசிய சேவையினருக்கும் பொதுமக்களுக்கும் எரிபொருள் விநியோகிப்போம்.

குறிப்பாக ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் எரிபொருள் விநியோகத்தின் போது பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக அட்டையில் பதிவுகளை மேற்கொண்டு விநியோகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது. – என்றார்.

# பிளாஸ்டிக் பொருள்களுக்கு முழுத் தடை இந்தியாவில் நாளை முதல் நடைமுறை!

ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருள்களுக்கு நாளை ஜுலை முதலாம் திகதி முதல் தடை விதித்து இந்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது என்று தினத்தந்தி இணையத்தில் செய்தி வெளியாகியுள்ளது.

அதன்படி ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் உற்பத்தி ஜுலை முதலாம் திகதி முதல் இந்தியா முழுவதும் தடை செய்யப்படுவதாக கடந்த ஆண்டு (2021) ஓகஸ்ட் 12 ஆம் திகதி மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் அறிவித்தது.

குறைவான பயன்பாடு கொண்ட, அதிக குப்பையை ஏற்படுத்தக்கூடிய இந்த பிளாஸ்டிக் பொருள்களின் உற்பத்தி, இறக்குமதி, சேமிப்பு, விநியோகம், விற்பனை, பயன்பாடு ஆகிய அனைத்தும் இந்தியா முழுவதும் முதலாம் திகதி முதல் தடை செய்யப்படும்.

தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்களில் செயல்படும் தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருள்களை வழங்க வேண்டாம் என தேசிய, மாநில மற்றும் உள்ளூர் மட்டங்களில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.





அதேபோல ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களை விற்க மாட்டோம் என்ற நிபந்தனையுடன் புதிய வணிக உரிமங்களை வழங்க உள்ளூர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்களை விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் வணிக உரிமங்கள் ரத்து செய்யப்படும். தடையை மீறுபவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது ரூ.1 லட்சம் வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

இதனை அமுல்படுத்த மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும், இதுபோன்ற பிளாஸ்டிக் பொருள்கள் கொண்டுசெல்லப்படுவதை சோதனைச்சாவடிகள் மூலம் கண்காணிக்க வேண்டும் என இந்திய அரசு சார்பில் உத்தரவிடப்பட்டு உள்ளது.

தடை விதிக்கப்படும் பொருள்கள்:–

* பிளாஸ்டிக்கால் ஆன காது குடையும் குச்சி
* பலூனில் கட்டப்படும் பிளாஸ்டிக் குச்சி
* பிளாஸ்டிக் குச்சி
* பிளாஸ்டிக் கொடி
* மிட்டாயில் இருக்கும் பிளாஸ்டிக்
* ஐஸ்கிறீம் குச்சி
* அலங்கார வேலைகளுக்கான தெர்மாகோல்
* சாப்பிட பயன்படுத்தும் பிளாஸ்டிக் முள்கரண்டி, தேக்கரண்டி, கத்தி
* சுவீட் பாக்ஸ், அழைப்பிதழ், சிகரெட் பாக்கெட் ஆகியவற்றை சுற்றி கட்டப்படும் பிளாஸ்டிக் சுருள்கள்
* பிளாஸ்டிக் அல்லது பி.வி.சி. பேனர்கள் ஆகியவற்றுக்கும் தடை விதிக்கப்படுவதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## தொடர் மின்வெட்டால் பெருஞ்சீற்றம் பாகிஸ்தானில் மக்கள் சாலை மறியல்!

இஸ்லாமாபாத்,ஜுன்30

பாகிஸ்தானின் கராச்சி நகரில் தொடர் மின்வெட்டுக் காரணமாக பொதுமக்கள் இரண்டாவது நாளாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இப்போராட்டத்தால் கராச்சியில் உள்ள மௌரிபூர் சலையில் 15 மணி நேரமாக சாலைப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

நான்கு வருடத்தில் இல்லாத அளவுக்கு ஜுன் மாதத்தில் எரிபொருள் இறக்குமதியின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளதால் இந்த சிக்கல் எழுந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே, மின்பற்றாக்குறையைப் போக்க நாட்டின் பல்வேறு இடங்களில் அரசு ஊழியர்களின் பணிபுரியும் நேரத்தைக் குறைத்துள்ளது. தொழிற்சாலைகள், ஷொப்பிங் மோல்களை வழக்கமான நேரத்தை விட முன்னரே மூடும்படி அரசு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் பணவீக்கம் ஜுலையில் இரண்டு இலக்கத்துக்கு வந்தடைந்திருப்பதால் இன்னும் 6 ஆண்டுகளில் மோசமான விளைவை அது ஏற்படுத்துமென பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர்.



## இலங்கைக்காக சர்வதேச சந்தையில் கடனுக்கு எரிபொருளை வாங்கித் தரப் போகிறது இந்தியா




40 ஆயிரம் தொன் படி நான்கு தடவைகளில் கிடைக்கும்

இலங்கையில் நிலவி வரும் எரிபொருள் தட்டுப்பாட்டை சமாளிக்கும் விதமாக, இந்தியாவிடமிருந்து நான்கு தவணைகளில் எரிபொருளை ஒரு தவணைக்கு 40,000 தொன் வீதம் இலங்கை அரசு வாங்க உள்ளதாக 'டெய்லி மிர்ரர்' தளத்தில் செய்தி வெளியாகியுள்ளது.

உலகச் சந்தையிலிருந்து மொத்தமாக எரிபொருளை சில தள்ளுபடிகளுடன் வாங்கும் நாடாக இந்தியா இருக்கிறது. இந்த நிலையில், இரு நாட்டு உறவு மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு, இணைந்து எரிபொருள் வாங்குவதற்கான முன்வடிவை இலங்கை இந்தியாவிடம் அளித்துள்ளது. அதாவது, உலக சந்தையிலிருந்து இந்தியா வாங்கும் அதே தள்ளுபடி சலுகைகளுடன் இலங்கைக்கும் சேர்த்து எரிபொருள் வாங்கும்படியான கோரிக்கை முன்வடிவு இது. இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்த யோசனையை அண்மைக்காலங்களில் தெரிவித்து வந்தார்.

தற்போது நான்கு தொகுப்புகளாக எரிபொருள் கொள்வனவை முன்னெடுக்க இலங்கை அரசு யோசனை தெரிவித்துள்ளது. அதன்படி, முதலாவதாக டீசல் கப்பல் வந்து சேரும். பின்னர் தேவையின் அடிப்படையில் பெற்றோல் வரும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இவை விற்கப்பட்டு பணமாக மாற கூடுதலாக ஒருவார கால அவகாசம் தேவைப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இலங்கை இந்தியாவிடமிருந்து 70 கோடி அமெரிக்க டொலர்களை கடனாக பெற்றுள்ளது என்று டெய்லி மிர்ரர் செய்தி தெரிவிக்கிறது.

# அரசியல் கைதிகளின் பெற்றோர்களின் நிலை பேரினவாத சித்திரவதையைக் காட்டுகின்றது!

## அருட்தந்தை மா.சத்திவேல் காட்டம்



அரசியல் கைதிகளின் பல பெற்றோர் வயது முதிர்ந்த நிலையிலேயே உள்ளனர். இவர்களின் தேவைகளை அறிவாரல்லர். இவை பேரினவாத சமூக சித்திரவதையையே காட்டி நிற்கின்றதென அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யுத்த காலப்பகுதியில் சொத்துக்களை இழந்தோர், உடைமைகளை இழந்தோர் இன்றும் வறுமையின் பிடிக்குள் இருந்து மீளமுடியாதுள்ளனர். அதுமட்டுமல்ல முடிவுறாது தொடர்கின்றது காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டம்.

ஆட்சியாளர்களின் ஏமாற்று நாடகம் சர்வதேச அமைப்புகளின் பாராமுகம், கால இழுத்தடிப்பு உறவுகளின் தாய்மாரை துயரத்தில் தள்ளியுள்ளது.

உறவுகளைத் தேடி தேடியே பலர் கண்ணீரையும், வேதனையையும் சொந்தமாக்கிக் கொண்டுள்ளதோடு இவர்களில் பலர் பல்வேறு நோய்களுக்கு உள்ளாகி அதனால் நூற்றுக்கு அதிகமானோர் இறப்பை சந்தித்துள்ளனர். இது இழப்பு என்பதை விட சித்திரவதை கொலை என்றே கூறலாம்.

அரசியல் கைதிகளின் உறவுகள் தங்கள் உறவுகள் எப்போது வீட்டுக்குத் திரும்புவர் என அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர். பிள்ளைகளுக்காக ஏங்கும் தாய்மார்கள், தகப்பனுக்குக் காத்திருக்கும் பிள்ளைகள், கணவனை எதிர்பார்த்திருக்கும் மனைவி, குடும்ப சுமையோடு பிள்ளைகளின் எதிர்காலம் தெரியாதிருக்கும் தாய்மார் வலிகளை மட்டுமே சுமந்து நிற்கின்றனர்.

அரசியல் கைதிகளின் பல பெற்றோர் வயது முதிர்ந்த நிலையிலேயே உள்ளனர். இவர்களின் தேவைகளை அறிவாரல்லர். இவையெல்லாம் பேரினவாத சமூக சித்திரவதையே.

இவர்களின் வாழ்வு தன்மையை ஒத்ததாகவே யுத்த காலப்பகுதியில் உடல்ரீதியாக பாதிப்புக்குள்ளானவர்கள், உடல் உறுப்புகளை இழந்தோர், அவர்களில் தங்கி வாழ்வோர் நிலையும் உள்ளது. இவையெல்லாம் சித்திரவதையின் வெளிதெரியாமுகம்.

மேலும் சமூக மயமாக்கப்பட்டதாகக் கூறப்படும் முன்னாள் போராளிகளும் திறந்தவெளி சிறைக்குள்ளே மீண்டும் தள்ளப்பட்ட நிலையில் வாழ்வைத் தொடர்கின்றனர்.

படையினரின் உறவைப் பேண வேண்டும். இதற்கு பலவந்தமாக அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இல்லையெனில் அவர்களுக்கு எதிர்காலம் இல்லை. சுதந்திரமாகச் செயற்பட நினைப்பவர்கள் புலிகளின் மீளுருவாக்கம் என சிறையில் தள்ளப்பட்டவர்களுமுண்டு. இதனையும் சித்திரவதைக்குள்ளேயே அடக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல விசாரணை காலகட்டங்களில் பல்வேறு வகையிலான சித்திரவதைகளை அனுபவித்து அவற்றை வெளியில் சொல்ல முடியாத முன்னாள் போராளிகளும் கைதிகளும் உள்ளனர். இவர்கள் அனுபவிக்கும் உடல் உபாதைகளும் பாதிப்பும் ஆற்றுப்படுத்த முடியாதவைகளே.


சமூகத்தில் பல்வேறு மட்டத்தில் உள்ளன. ஈழத்தமிழர்கள் உள ரீதியில் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர். பலர் இந்நிலையிலிருந்து மீண்டவர்களாகத் தோற்றம் கூறினாலும் பாதிக்கப்பட்ட உள்ளத்தோடேயே வாழ்நாளைக் கழிக்கின்றனர் என்பதே உண்மை.

இந்த விடயத்தில் புலம்பெயர் சமூகம் பாரிய பங்களிப்பு உள்ளது என அறிவிக்கும் இனப்படுகொலைக்கும் முகம் கொடுத்த சமூகம் புதிய நிகழ்ச்சி வரை படத்திற்கு வந்து ஒரே நேர்கோட்டில் பயணிக்க வேண்டிய காலகட்டம் இது. இல்லையெனில் உடல் உள பாதிப்பும் சித்திரவதைக்குள்ளான நோய் சமூகமாகவே வாழ வேண்டிய நிலை ஏற்படும். தற்போதைய சூழ்நிலையில் கேள்வி பூனைக்கு மணி கட்டுவது யார் என்பதே?. – என்றார்.

# பாலியல் குற்றங்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும்

## தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை வலியுறுத்து

பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு கடும் தண்டனை வழங்குவதில் நாம் அக்கறையைக் கொண்டுள்ளோம். இவ்வாறான பிரச்சினைகளை மூடி மறைக்காது நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதுடன் சமூக அமைப்புகள் அரசியல் கட்சிகள் இந்த விடயத்தில் கூடுதலான கரிசனைஎடுத்துசெயற்படவேண்டும்எனதமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் நிஷாந்தன் தெரிவித்தார்.



யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியர்கள் மற்றும் துஷ்பிரயோகத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு தண்டனைவழங்கப்படவேண்டும். அத்துடன் அவர்களது குடும்பத்தினர் மீதும் பொது அமைப்புகள் எச்சரிக்கையை விடுக்க வேண்டும். பாலியல் குற்றங்களைச் செய்பவர்கள் வெளியிலிருந்து வரவில்லை. எமது சமூகத்தின் வலியை புரிந்தவர்களே இவ்வாறான செயல்களைச் செய்கின்றார்கள்.

முல்லைத்தீவு பாடசாலை சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியர் கைது செய்யப்பட்டாலும் இன்னமும் அந்த சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்கள் கைது செய்யப்படவில்லை. அவர்கள் கைது செய்யப்பட்டு அதற்கான தண்டனைகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். அது மட்டுமன்றி மகளிர் அமைப்புகள் இந்த விடயத்தில் அமைதியாக இருப்பது ஏன் எனப் புரியவில்லை. இவ்வாறான சம்பவங்கள் நடைபெறும் போது மகளிர் சமூகத்தினர் எங்கே தூங்கிக் கொண்டு இருக்கின்றார்கள். நாடு இருக்கும் பொருளாதார பிரச்சினையில் இவ்வாறான பிரச்சினைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. பல குற்றச்செயல்கள் பாலியல் துஷ்பிரயோகம் உட்பட ஏனைய சமூக விரோதமான செயற்பாடுகள் யாழ். மாவட்டத்திலும் சரி முல்லைத்தீவிலும் சரி வடக்கிலும் சரி இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறானவர்களுக்குக் கடும் தண்டனை வழங்குவதில் நாம் அக்கறையைக் கொண்டுள்ளோம். இவ்வாறான பிரச்சினைகளை மூடி மறைக்காது நீதி நிலைநாட்டப்படவேண்டும். சமூக அமைப்புகள் அரசியல் கட்சிகள் இந்த விடயத்தில் கூடுதலான கரிசனை எடுத்து செயற்படவேண்டும்.

எரிபொருள் பிரச்சினை தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் –

மக்கள் வீதிகளில் நிற்கின்றார்கள். ஆனால்,எரிபொருள் விநியோகம் எப்போது எனத் தெரியாது. ஆனால் எமது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் காணவில்லை. மக்கள் வரிசைகளில் காணப்படும்போது இன்று வரைக்கும் எந்த ஒரு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களை சந்தித்ததாகத் தெரியவில்லை. மக்களுடைய ஆதங்கங்களைப் புரிந்துகொண்டு அவர்கள் செயற்பட வேண்டும். உங்களால் அந்த பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும் ஆனாலும் கூட மக்களை ஆற்றுப்படுத்துவதற்காகக் கூட மக்களுடன் களத்தில் இறங்கி இருக்க வேண்டும். – என்றார்.

# உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அரசு நம்பிக்கையை இழந்துள்ளது!

## சனத்ஜெயசூரிய டுவிட்


அரசாங்கம் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் நம்பகத்தன்மையை இழந்துள்ளது என சனத்ஜெயசூரிய டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். எரிபொருள்நெருக்கடி காரணமாக தற்போது ஏற்பட்டுள்ள முழுமையான தோல்வி காரணமாக அரசாங்கம் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் நம்பகத்தன்மையை இழந்துள்ளது என்பது வெளிப்படையான விடயம். முன்னர் எப்போதையும் விட மக்கள் அதிகளவு துன்பத்தில் சிக்குண்டுள்ளனர். ஜனாதிபதி கோட்டாபய அவர்களே எங்களுக்கு ஹீரோவே தேவை பிடில் வாசிப்பதற்கு நீரோ தேவையில்லை.

நாடு எரிந்துகொண்டிருக்கின்றது எழுந்திருங்கள் என அவர் தெரிவித்துள்ளார்.



# ல புத்திரகாளி தீ மிதிப்பில் பக்தர்கள் கூட்டம்





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச்சிறப்புமிக்க மட்டக்களப்பு புன்னைச்சோலை அருள்மிகு ஸ்ரீபத்திரகாளியம்மன் ஆலய திருச்சடங்கு கடந்த ஞாயிறு மாலை தீமிதிப்பு உற்சவத்துடன் நிறைவுபெற்றது.

கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை இரவு திருக்கதவு திறத்தலுடன் ஆலயத்தின் வருடாந்த திருச்சடங்கு ஆரம்பமானது.

ஆலய உற்சவ காலங்களில் திருச்சடங்கு சிறப்பாக நடைபெற்று கடந்த புதன்கிழமை கல்யாணக்கால் வெட்டும் வைபவம் மிக சிறப்பாக நடைபெற்றது.

ஞாயிறு மாலை மட்டக்களப்பு வாவியில் அன்னையின் சமுத்திர நீராடும் நிகழ்வு நடைபெற்று அம்பாள் ஊர்வலமாக வந்து தீக்குளி காவல் செய்யப்பட்டு தீமிதிப்பு உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த தீமிதிப்பு உற்சவத்தில் சுமார் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட அடியார்கள் கலந்துகொண்டமையுடன் தீ மிதித்து தமது நேர்த்திக் கடன்களைச் நிறைவேற்றிக் கொண்டனர்.

இத்தீமிதிப்பு வைபவத்திற்கு இலங்கையில் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் ஆலயத்திற்கு வருகைதந்து தமது வழிபாடுகளையும் நேர்த்திக் கடன்களையும் நிறைவேற்றுகின்றமை வழமை. கடந்த மூன்று வருடங்களின் பின் வருடாந்த திருச் சடங்கு இவ்வாண்டு மிக விமர்சையாக நடைபெற்றுள்ளது. இலங்கையில் உள்ள அம்மன் ஆலயங்களில் அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் தீமிதிப்பில் கலந்து கொள்ளும் ஆலயமாக புன்னைச்சோலை பத்திரகாளியம்மன் கோவில் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுகள் வெற்றிபெற்றுள்ளனவாம்

## கூறுகின்றார் ருவான் விஜேவர்தன



சர்வதேச நாணய நிதியம் மற்றும் மேற்குலக நாடுகளுடன் முன்னெடுத்துள்ள பேச்சுகள் வெற்றி பெற்றுள்ளன.

அதன் காரணமாகவே ஆரம்பத்தில் நாட்டை பொறுப்பேற்கத் தயங்கியவர்கள் தற்போது பிரதமர் பதவியைத் தேடுகின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

தொழில் வல்லுநர்கள் குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நெருக்கடி நிலைமைகளின் போது சவால்களைப் பொறுப்பேற்காத எதிர்க்கட்சிகள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பை ஏற்று 2 மாதங்கள் கூட நிறைவடையாத நிலையில் அவர் தோல்வியடைந்துள்ளார் எனக் கூறுகின்றன. நாட்டிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவருக்கு இன்னும் சிறிது காலம் செல்லும்.

எரிபொருள் நெருக்கடியால் மக்கள் வேறுபாடுகள் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை நாம் நன்கு அறிவோம். ஏனெனில் நாமும் வரிசைகளில் இருந்து எரிபொருளைப் பெறுகிறோம்.

மக்கள் படும் துன்பம் எங்களுக்குத் தெரியும். இந்தப் பேரழிவிலிருந்து மக்களைக் காப்பாற்றும் பொறுப்பை பிரதமர் ஏற்றுக்கொண்டார்.

மத்திய வங்கியின் டொலர் கையிருப்பு பூச்சியமாக வீழ்ச்சியடைந்து இலங்கை வங்குரோத்து நாடாக உலகிற்கு அறியப்பட்ட போதே ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார்.

இந்தியாவிடமிருந்து கடன் திட்டத்தின் கீழ் பெற்ற எரிபொருளைத் தவிர, வேறு எந்த வகையிலும் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு முற்பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

கடந்த நவம்பரில் இருந்து எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 73 கோடியே 80 லட்சம் டொலர் வழங்கப்படவில்லை. அதனால் அவர்கள் எரிபொருள் விநியோகத்தை நிறுத்தினர். எனவே தான் புதிய விநியோகத்தர்களைத் தேட வேண்டியேற்பட்டது.

மருந்துப் பிரச்சினைகள் இன்னும் உள்ளன. இந்த நெருக்கடியை சமாளிக்க சர்வதேச நாணய நிதியம், இந்திய பிரதிநிதிகள், அமெரிக்க மற்றும் சீனத் தூதர்கள் ஆகியோருடன் பிரதமர் பேச்சு நடத்தினார். இந்த பேச்சுகள் அனைத்தும் மிகவும் வெற்றிகரமான கட்டத்தில் உள்ளன.

இவ்வாறான நிலைமையிலேயே எரிபொருள் நெருக்கடி மீண்டும் தலைதூக்கியுள்ளது. இலங்கை தற்போது வங்குரோத்தடைந்த நாடாகக் கருதப்படுகிறது.

உலகதரவரிசைப்படுத்தலில் வீழ்ச்சிகண்டுள்ளோம். இதன் காரணமாக உள்நாட்டு வங்கியில் திறக்கப்பட்ட கடன் கடிதத்தின் மீது நம்பிக்கை அற்ற நிலைமை சர்வதேசத்தின் மத்தியில் காணப்படுகிறது.

எரிபொருளைப் பெறுவதற்குப் பல நாடுகளுடன் கலந்துரையாடி வருகிறோம். ரஷ்யாவுடனும் பேச்சு நடத்தி வருகிறோம். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதோடு, மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் பிரதமர் அனைத்து முயற்சிகளையும் முன்னெடுத்து வருகிறார். இந்த நெருக்கடிகளை உணர்ந்த பின்னரே ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றார். நாட்டு மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்தினார்.

அதனால்தான் ஜூன் மாதத்தின் இறுதி வாரங்களில் கடுமையான எரிபொருள் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என்ற உண்மையை அவர் வெளிப்படுத்தினார்.

இவ்வாறு நாட்டின் உண்மை நிலைமையைக் கூறிய போது, மக்கள் கேலி செய்தார்களே தவிர அவர்கள் பிரச்சினையைப் புரிந்துகொள்ளவில்லை. பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் அனுமதிக்கவுமில்லை. உலகின் பல நாடுகளில் இதுபோன்ற எரிபொருள் நெருக்கடிகள் உள்ளன.

இங்கிலாந்தில் கூட சில ஆண்டுகளுக்கு முன்பு இதே நிலை ஏற்பட்டது. அந்த நாட்டில் உள்ள கட்சிகள் எவ்வித பிளவுமின்றி ஒன்றிணைந்து எரிபொருள் நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டன. ஆனால் இலங்கை அரசியல்வாதிகள் அவ்வாறானவர்களல்லர். இந்த நெருக்கடியிலும் கூட அரசியல் ஆதாயம் தேடவே முயற்சிக்கின்றனர்.

அன்று பிரதமர் பதவியை ஏற்பதற்கு நிபந்தனைகள் விதித்தவர்கள், இன்று ஏன் பிரதமர் பதவியைத் தேடி அலைகிறார்கள்? சர்வதேச நாடுகளுடன் ரணில் விக்கிரமசிங்க நடத்திய பேச்சுக்கள் வெற்றியடைந்ததன் காரணமாகவே இன்று அவர்கள் பிரதமர் பதவியைத் தேடி வருகின்றனர்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவுவது தொடர்பில் சாதகமாகப் பதிலளித்துள்ளதே இதற்குக் காரணமாகும். அத்தோடு அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் எமக்கு ஆதரவளிக்க முன் வந்துள்ளன. இதனால்தான் அவர்கள் இப்போது பிரதமர் பதவிக்கு ஆசைப்படுகிறார்கள்.

ஆனால் அவர்களும் நாட்டைக் கட்டியெழுப்ப 6 மாதங்கள் அவகாசம் கேட்கின்றனர். மற்றொருவர் 5 ஆண்டுகள் தேவை என்கிறார். எனவே, இந்த வாய்ப்பை பிரதமருக்கு ஏன் வழங்கக் கூடாது? அவர் பிரதமராகி இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை. ஆனால் அவர் திட்டமிட்டபடி நாட்டைக் கட்டியெழுப்புவார். அதற்காக குறைந்தபட்சம் ஆறு மாத கால அவகாசம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

எதிர்க்கட்சியானாலும் ஆட்சிக்கு வந்தவுடன் அவர்களாலும் எரிபொருளை வழங்க முடியாது. எனவே இந்த இரண்டு வாரங்கள் பொறுமையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். இரண்டு வருடங்களாக அழிந்த நாட்டை இரண்டு மாதங்களில் மாற்ற முடியாது. அதற்கு சிறிது காலம் செல்லும். எனவே மக்கள் அனைவரையும் ஒன்றிணைந்து எமக்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

# போராளிகளை விசாரிக்காமல் மாபியாக்களை கண்டுபிடியுங்கள்

## புலனாய்வுப் பிரிவினருக்கு செல்வம் எம்.பி. அறிவுரை

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளைத் தொந்தரவு செய்யாமல் எரிபொருளை பதுக்கும் மாபியாக்களை கண்டுபிடிப்பதற்கு புலனாய்வுப் பிரிவினர் முன்வர வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிப்பது என்ற அரசின் அறிவிப்பு குழந்தைப் பிள்ளைத்தனமானது. இதனால் கடற்றொழிலாளர்கள், விவசாயிகள் உட்பட பல தரப்பினர் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்படுவர்.

ஏசிரூமில் இருக்கும் அமைச்சர் பந்துல குணவர்த்தன சாதாரண மக்கள்வரிசையில்நிற்கும்பரிதாபத்தை உணர்ந்திருப்பாரோ என்று தெரியவில்லை.

அதிலும் பெண்கள் இந்த விடயத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்று ஒருநேர சாப்பாட்டுடன் வாழ்வைக் கழிக்கும் அவல நிலை பலருக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே அந்த மக்களின் பரிதாப நிலையை அறியாது அமைச்சர் பந்துல இவ்வாறு அறிவித்திருக்கின்றமை ஏற்க முடியாத கருத்தாகவே உள்ளது. எனவே இந்த நடைமுறையை அவர் உடனடியாக வாபஸ் பெறவேண்டும்.

அத்துடன் அனைத்து மக்களுக்கும் எரிபொருளைப் பெற்று கொடுப்பதற்கான வசதியை அரசாங்கம் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். எமது மக்களை எள்ளி நகையாடுபவர்கள், துன்பப்படுத்துபவர்கள், இந்த அரசாங்கத்திலே இருக்கக்கூடாது.

இந்த அரசிடம் எந்த திட்டமும் இல்லை. ஜனாதிபதி எடுத்துள்ள முடிவில் மாற்றம் ஏற்பட்டது போல எமக்குத் தெரியவில்லை.

எனவே புதியவர்கள் வந்தபின்னரும் சரியான திட்டமிடல் இல்லை என்றால் எமது மக்களே எல்லா விதத்தாலும் பாதிக்கப்படுவார்கள். இன்று அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. இந்த நேரத்தில் எரிபொருளைக் கோரி ரஷ்யாவிற்கும் கட்டாருக்கும் செல்லும் அமைச்சர்கள் அந்த முஸ்தீபை முன்னமே செய்திருக்க வேண்டும்.

மக்களை நாள்கணக்கில் வீதிகளிலே காத்திருக்க செய்துவிட்டு தற்போது செல்கின்றமை அவர்களிடம் சரியான திட்டமிடல் இன்மையையே புலப்படுத்துகின்றது. இவர்களால் ஏன் சரியான ஒரு வழிமுறையைக்



காணமுடியாமல் போனது என்ற கேள்வி எழுகின்றது.

இதேவேளை களவு செய்பவர்களுக்கும், பதுக்குபவர்களுக்கும் தாராளமாக எரிபொருள் கிடைக்கப்பெறுகின்றது. புனர்வாழ்வு பெற்ற விடுதலைப் புலி உறுப்பினர்களை இலங்கை புலனாய்வுப் பிரிவினர் ஒவ்வொருநாளும் சென்று விசாரணை மேற்கொள்கின்றனர். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன்.

இவற்றை எல்லாம் இடைநிறுத்தி விட்டு எரிபொருளைப் பதுக்குபவர்களைக் கண்டறிவதற்காக இந்த புலனாய்வு உத்தியோகத்தர்களைப் பயன்படுத்து முடியும். – என்றார்.

# 835 வீத கட்டண அதிகரிப்பை மின்சார சபை கோரியுள்ளது!

## ஏ.எவ்.பி. செய்தி வெளியிட்டது

இலங்கை மின்சார சபை 835 வீத மின்கட்டண அதிகரிப்பை கோரியுள்ளதாக ஏ.எவ்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ள எரிபொருள் இல்லாத இலங்கையின் மிகவும் நட்டத்தில் இயங்கும் அரசாங்க ஏகபோக நிறுவனமான இலங்கை மின்சார சபை அதிர்ச்சி தரும் 835 வீத கட்டண அதிகரிப்பை ஏழை நுகர்வோரிடமிருந்து கோரியுள்ளது என மின்சார ஒழுங்குபடுத்தும் அமைப்பு தெரிவித்துள்ளது.

தென்னாசிய நாடு அந்நியசெலாவணி பற்றாக்குறை காரணமாக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. மின்சார உற்பத்தி மற்றும் போக்குவரத்துக்கான எரிபொருளைக் கூட இறக்குமதி செய்ய முடியாத அளவிற்கு டொலர் தட்டுப்பாடு காணப்படுகின்றது.

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் இலங்கை மின்சார சபை 650 கோடி ரூபா நஷ்டத்தை சந்தித்துள்ளதுடன், அதிகளவு மானியத்தைப் பெறும் சிறிய மின்சார கொள்வனவாளர்களிடமிருந்து 835 வீத கட்டண அதிகரிப்பைக் கோரியுள்ளது என இலங்கையின் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தற்போது 30 கிலோ வாட்ஸிற்கு பயன்படுத்துபவர்கள் மாதாந்த கட்டணமாக 54 ரூபா 27 சதத்தை செலுத்துகின்றனர், இலங்கை மின்சார இதனை 507 ரூபா 65 சதமாக அதிகரிப்பதற்கான அனுமதியை கோரியுள்ளது என இலங்கையின் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பெரும்பாலான நுகர்வோரால் இவ்வளவு பாரிய விலை அதிகரிப்பை தாங்கிக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ள ஆணைக்குழுவின் தலைவர் ஜானகரட்னநாயக்க இதன் காரணமாக அவர்கள் கேட்டதை விட குறைவாக அதிகரிப்பதற்கு(அரைவாசிக்கும் குறைவாக)திறைசேரியிடமிருந்து நேரடி மானியத்தை பெறும் யோசனையை முன்வைத்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் பாவனை கட்டண அதிகரிப்பு தொடர்பாக இன்னமும் தீர்மானிக்கவில்லை. ஆனால் வர்த்தக மற்றும் கைதொழில்துறையினரின் மின்கட்டணங்கள் 43 முதல் 61 வீதத்தால் அதிகரிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆர்ப்பாட்டக்காரர்களைக் குற்றவாளிகளாக்க தேசிய பாதுகாப்புசட்டங்களை பயன்படுத்தாதீர்!

## ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்து

இலங்கையைப் பொறுத்தமட்டில் பொதுமக்கள் ஏன் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றார்கள் என்ற காரணத்தை அறிந்துகொள்வதற்கும் தீர்வை வழங்குவதற்குமான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதைவிடுத்து, அவை அரசாங்கத்தின் நிறைவேற்றுத் தீர்மானங்கள் மூலம் அடக்கப்படுவதாகக் கடுமையான கரிசனையை வெளிப்படுத்தியிருக்கும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் கிளெமென்ட் நியாலெற்சொஸி, தமது சட்டரீதியான உரிமையைப் பயன்படுத்தும் ஆர்ப்பாட்டக்காரர்களைக் குற்றவாளிகளாக்குவதற்கு பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் உள்ளிட்ட தேசிய பாதுகாப்புச்சட்டங்களைப் பயன்படுத்துவதை அரசாங்கம் தவிர்க்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் கிளெமென்ட் நியாலெற்சொஸி துனிசியா, ஆர்மேனியா, இலங்கை மற்றும் சிம்பாபே ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு, அந்நாடுகளின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஆராய்ந்து, அது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான அவரது அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

இலங்கையில் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தைப் பொறுத்தமட்டில், சில ஒன்றுகூடல்களைத்தடுக்கும்வகையில்அரசாங்கத்தால் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன என எமக்குத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேற்படி தரப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான காரணம் மற்றும் அவர்களது அதிருப்தி என்னவென்பதை அறிந்துகொள்வதற்கான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்குப் பதிலாக, நிறைவேற்றுத் தீர்மானத்தின் ஊடாக அந்த ஆர்ப்பாட்டங்கள் அடக்கப்படுகின்றன.

அதுமாத்திரமன்றி, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஆர்ப்பாட்டங்களுக்கான விடையாக பொலிஸார் பிரசன்னமாவதுடன், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையை மீறும் வகையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கைதுசெய்யப்படுகின்றனர்.

போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுடன் தொடர்புடைய விவகாரங்களுக்கான பொறுப்புக்கூறல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சமத்துவமான சமூக மற்றும் பொருளாதாரக் கொள்கைகள், சிறந்த வேலைச்சூழல் மற்றும் கல்விக்கான உரிமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக்கோரி அமைதியான முறையில் போராடும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அமைதி வழியிலான ஒன்றுகூடல்கள் தொடர்பில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் சட்டரீதியான தேவைப்பாடு சார்ந்த கொள்கைகள் மற்றும் அவசியத்தன்மை என்பவற்றுக்கு ஏற்புடையதாக அமைவது அவசியம் என்பதுடன், அவை வெறுமனே மேம்போக்காகப் பிரயோகிக்கப்படக்கூடாது.

ஆகவே, இலங்கை அரசாங்கம் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பில் தெளிவானதும், சட்டத்துக்கு அமைவானதுமான வழிகாட்டல்களைத் தயாரிக்கவேண்டியது அவசியமாகும். அத்தோடு அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான தமது சட்ட உரிமையைப் பயன்படுத்தும் ஆர்ப்பாட்டக்காரர்களைக் குற்றவாளிகளாக்குவதற்கு பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் உள்ளிட்ட தேசிய பாதுகாப்புச் சட்டங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட தரப்பினரை இலக்குவைப்பதற்கும் கைது செய்வதற்கும் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் பயன்படுத்தப்படுவதாக எமக்குத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதேவேளை கடந்த 2021 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழான வழிகாட்டல்கள் இலங்கையின் மனித உரிமைகள்சார் கடப்பாடு மேலும் மீறப்படுவதற்கு வழிவகுக்கும் என்பது மிகுந்த கரிசனைக்குரிய விடயமாகும்.

மேலும் கடந்த மார்ச்மாத இறுதியிலிருந்து நாடளாவிய ரீதியில் பெருமளவிலான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அவசரகால நிலைப் பிரகடனம் மற்றும் அவசரகால வழிகாட்டல்கள் வெளியீடு உள்ளடங்கலாக அதனுடன் தொடர்புபட்டதாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் கரிசனைகளைத் தோற்றுவித்திருக்கின்றன.

அதுமாத்திரமன்றி ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப்பிரயோகம் என்பன மேற்கொள்ளப்பட்டமை மற்றும் பொதுச்சொத்துக்களை சேதப்படுத்தியமைக்காகப் பாதுகாப்புப்படையினரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டமை ஆகிய சம்பவங்கள் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் அரசாங்கம் அர்த்தமுள்ள பாதுகாப்புக் கட்டமைப்பு மறுசீரமைப்பை மேற்கொள்வதுடன், இராணுவ மயமாக்கலை முடிவிற்குக்கொண்டுவரவேண்டும்.

அத்தோடு நாடாளுமன்றப்பேரவை, காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட முக்கிய கட்டமைப்புக்கள் உரியவாறு இயங்குவதற்கு அவசியமான உதவிகள் வழங்கப்படவேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு அனைவரும் பொறுப்புக் கூறவேண்டும்

## சபாநாயகர் வலியுறுத்து



நாடாளுமன்றத்தில் பேசப்படும் தேவையற்ற பேச்சுக்களுக்கு அதிக பிரபல்யம் வழங்குவதைத் தவிர்த்து மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

அத்துடன் நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு அனைவரும் பொறுப்புக்கூறவேண்டும். தவறு செய்தவர்களைக் கண்டுபிடித்து தண்டனை பெற்றுக்கொடுத்தால் பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்ற ஊடகவியலாளர்களுக்கான விசேட கருத்தரங்கு ஒன்று கொழும்பு சினமன் கிரேன்ட் ஹோட்டலில் நடைபெற்றது. அங்கு விசேட அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் உட்பட முக்கியஸ்தர்கள்பலரும்கலந்துகொண்ட இந்த கருத்தரங்கில் அச்சு ஊடகம் மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய சபாநாயகர் –

நாடாளுமன்றத்தில் 225 உறுப்பினர்களையும் வேண்டாம் என மக்கள் சொல்வார்களாயின் அடுத்த கட்டநடவடிக்கைஎன்ன? அமைச்சரவைகலைக்கப்பட்டு, பிரதமர் பதவி விலக்கப்பட்டு என்ன நடந்தது? கிடைக்க வேண்டியதெல்லாம் கிடைத்து விட்டதா? அதே வேளை, புதிய பிரதமர் நியமிக்கப்பட்டு புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டு என்ன நடந்தது? எரிபொருள் கிடைத்து விட்டதா அத்தியாவசிய பொருள்கள் கிடைத்து விட்டனவா? அடுத்தது என்ன?

நாடாளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் தேர்தல் நடத்தினால் மீண்டும் 225 பேர் வருவர். அப்போது எல்லாம் சரியாகிவிடுமா? அப்படியானால் அரசமைப்பை வீசி எறிந்து விடுவோமா? மக்களுக்கான பொறுப்பை நாம் சரியாக நிறைவேற்ற வேண்டும். அதனைப் பாதுகாப்பது அவசியம். நாடு மற்றும் எதிர்கால பரம்பரை தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும். நாடாளுமன்றம் தொடர்பில் மக்கள் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டியது அவசியமாகும்.

புதிதாக அரசாங்கம் அமைக்கப்பட்டு புதிதாக வந்துள்ளவர்களும் அதையே செய்து விட்டு போய்விடுவர். அந்த நிலையிலும் நாம் வாழ வேண்டியுள்ளது.

எமது பிள்ளைகள் வாழ வேண்டும். கொரோனா சூழ்நிலையிலும் தொடர்ச்சியாகப் பாடசாலைகள் மூடப்பட்டன. மீண்டும் இப்போதும் பாடசாலைகள் மூடப்படுகின்றன நாம் எங்கே சென்று கொண்டிருக்கிறோம்?

அதேவேளை, மக்கள் தமது தேவைகளுக்காக பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வரும் நிலையில் சரியான புரிந்துணர்வை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது ஊடகவியலாளர்களின் பொறுப்பாகும்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் உறுப்பினர்கள் அநாவசியமாக பேசுவதை நாடாளுமன்ற ஊடகவியலாளர்கள் நிராகரிக்க வேண்டும்.

அவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கக் கூடாது. அவ்வாறு வழங்கும் போது தான் நாடும் குழப்பமடைந்து மக்களும் குழப்பமடைய நேர்கிறது.

அதனால் மக்கள் 225 பேரையும் வேண்டாம் என்று கூறுவர். அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? வீடு தீக்கிரையாக்கப்படுகிறது. சொத்துக்கள் அழிக்கப்படுகின்றன. அவ்வாறு செய்தால் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

1983 ஆம் ஆண்டு எனது காலத்தில் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். 80 நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. எனது வீடும் எரிந்தது. குழந்தையின் பால் போத்தல் மட்டுமே மிஞ்சியது. அவ்வாறு செய்தால் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

நாட்டில் அனைத்துக்கும் அடிப்படையாக உள்ளது அரசமைப்பு. அரசமைப்பு பாதுகாக்கப்பட்டு, இந்த நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். எமது கடமை முடிந்து விடலாம் எனினும் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும்

நாம் பாதுகாக்க வேண்டிய ஜனநாயகம் தொடர்பில் எமக்கு பயம் ஏற்பட்டுள்ளது. இதில் எல்லோரதும் தவறு உள்ளது. அந்த தவறு நாடு மற்றும் சமூக முன்னேற்றத்துக்கு உதவும் வகையில் மாற்றப்பட வேண்டும்.

நாடாளுமன்ற ஊடகவியலாளர்களுக்கு பெரும் பொறுப்பு உள்ளது. நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு உள்ளது. அரசியல் தலைவர்கள் நூற்றுக்கு நூறு வீதம் சரியாக செயல்படுபவர்களல்லர். சிலர் சரியாக செயற்படுகின்றனர்.

இங்கு மட்டும் அல்ல, உலகில் எங்கும் அப்படித்தான் நடக்கிறது. அதிகளவு நன்மை செய்பவர்களை பலப்படுத்தி தைரியப்படுத்த வேண்டும் அதுதான் நாம் செய்ய வேண்டியது.

தவறுகளை சுட்டிக் காட்டுவது அவசியம். எமது பொருளாதார வீழ்ச்சி இன்று நேற்று வந்ததல்ல.அதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுத்தார்களா? அல்லது அவர்களுக்கு தண்டனை வழங்குவதால் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா? அப்படியானால் நெருக்கடி நிலைக்கு தீர்வு என்ன? அவர் பொறுப்பு கூறவேண்டும் இவர் பொறுப்பு கூறவேண்டும் எனக் கூறிக் கொண்டிருந்தால் சரியா? எனவே மக்களுக்கு சரியான தவகவல்களை வழங்கி அவர்களை ஜனநாயக நீரோட்டத்துக்குள் வரவழைக்க வேண்டிய பொறுப்பை ஊடகங்கள் மேற்கொள்ள வேண்டும். – என்றார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-50

### சுய நிர்ணயத்தின் மரபுகளும் புத்தி சாதுரியமான அணுகுமுறைகளும்

சுயநிர்ணயங்களுக்கு ஐ.நா. அங்கத்துவ நாடுகள் ஆதரவு தர தன்னலன்களில் எழும் அரசியலும் பொருளாதார லாபங்களும் அவர்களை ஊக்குவிக்கும்.



கிழக்கு திமோர் சுதந்திரத்தின் கதாநாயகர் குஸ்மோ

மனித உரிமை மீறல்களின் கரிசனங்கள் மாத்திரமே சுயநிர்ணயத்தை பெற்றுத்தரும் அத்திவாரமாக அமைந்துவிடா.

செக்கோஸ்லோவேக்கியாவில் இனவாரியான பகுதிகள் பிரிந்தமையை அடுத்து உருவான எத்தனையோ நாடுகள். இன அடிப்படையில் பிராங்கவை




2027 இல் போகன்வில்லுக்கு சுதந்திரம்

தான். இவை ரஷ்யாவின் ஆக்கிரமிப்பில் அதன் கீழ் இருந்தவை. ரஷ்யாவை அரசியல் ரீதியாகப் பலவீனப்படுத்த வேண்டுமென அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் எடுத்த தீர்மானங்கள் இந்த நாடுகள் உருவாவதற்கு வழிவகுத்தன.

அதேபோல பொருளாதார அனுகூலங்கள் கிழக்குத் திமோர் சுயநிர்ணயத்தால் விடுதலை பெற வழி வகுத்தன.

சிறிய தீவான கிழக்குத் தீமோர் போர்த்துக்கலின் காலனித்துவ நாடாக இருந்த போது இந்தோனேசியா அதனை ஆக்கிரமித்து தனது பகுதியாக்கியது. இதனை ஆஸ்திரேலியா, போர்த்துக்கல், அவர்களின் ஆதரவாளர்கள் கண்டித்து கிழக்குத் தீமோரின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தந்தாலும், ஐ.நாவில் அதற்கான முஸ்தீவுகள் முன்னெடுக்கப்பட்டன.

தீமோர் தீவின் கடல் சுற்றுப் பகுதிகளில் பெருவாரியான எண்ணை வளமும் எரிவாயுவும் தேங்கி கிடக்கின்றன என ஆஸ்திரேலியாவின் பிரபல பி.எச்.பி. என்ற நிறுவனம் ஆராய்ச்சியில் அறிந்தது.

தான் இவற்றை வளப்படுத்தி லாபம் பெறுவதற்கு இந்தோனேஷியாவுடன் ஒப்பந்தங்கள் ஏற்படுத்துவதிலும் பார்க்க சிறியதும் வளர்ச்சிக்கு பணம் தேவையானதுமான தீமோருடன் நேரடியாகப் பேசுவது இலகுவாகும் என மேற்குலகம் கருதியதனால் திமோர் நாடு பிறந்தது.

அதேபோல் ஆஸ்திரேலியா அடுத்த பசுபிக் பிராந்தியத்தில் 'போகன்வில்' என்ற சிறிய தீவு ஐ.நாவின் மேற்பார்வையில் சுயநிர்ணய அடிப்படையில் 2027 இல் சுதந்திரம் பெறும் புதிய நாடாகும்.

இது ஆஸ்திரேலியாவுக்கு 1500 கிலோ மீற்றர் தொலைவிலும் இருந்து 500 கிலோ மீற்றர் தூரத்திலும் இருக்கிறது. ஆனாலும் காலனித்துவ ஒழுங்கு முறைகளால் ஐரோப்பிய காலனித்துவ சக்திகள் இதனை தனி மாநிலமாக பார்த்தன.

1960 இல் போகன்வில்லின் பூர்வீக நிலத்தை சி.ஆர்.ஏ. (Conzinc Rio Tinto Australia - C.R.A.) என்ற நிறுவனம் அதன் கனிம சுரங்கத்தை எடுப்பதற்காக அங்கு சுரங்கம் அமைத்ததை அங்குள்ள மக்கள் எதிர்த்தனர். இந்த மக்கள் தீவிரமாகப் போராடி 1988 இல் 'பங்குனா' என்ற பகுதியில் நிறுவப்பட்ட சி.ஆர்.ஏயின் கனிமச் சுரங்கத்தை வலுக்கட்டாயமாக மூட வைத்தனர். அந்த நேரத்தில் பங்குனா கனிமச் சுரங்கத்தால் வந்த ஆதாயம் உலகத்திலேயே பெரிதளவாக இருந்தது.

ஆகவே, தங்கள் நிறுவனங்களுக்கு உதவும் முகமாக ஆஸ்திரேலியா, பப்புவா நியூ கினியா இரண்டும் இராணுவ




போகன்வில்

முற்றுகைகளால் போகன்வில் மக்களைச் சரணடைய வழிகள் வகுத்து, பல மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டன. ஆனால் மக்கள் போகன்வில் புரட்சிகர இராணுவத்துடன் இணைந்து போராட, பப்புவா நியூ கினியன் படைகளுக்கு ஆஸ்திரேலியா பெருத்த பண, ஆயுத உதவிகள் தந்தன. ஆயினும் இராணுவ தாக்குதல்களாலும், புரட்சியாளர்களின் தாக்குதலாலும் சுரங்கம் மூடப்பட வேண்டிய நிலைமையை அடைந்தது.

பின் 1990 இல் பப்புவா நியூ கினி அரசு போகன்வில்லை விட்டு வெளியேற, நியூசிலாந்து, பிஜி, வனவாட்டு போன்ற பசுபிக் தீவுகளுடன் இணைந்து, சமாதான ஒப்பந்தங்களை ஏற்படுத்தி, போர் நிறுத்தத்தைக் கொண்டு வந்து, பின் 1998 இல் மேலும் பேச்சுக்களில் ஈடுபட்டு, அந்த வருடம் பப்புவா நியூ கினி தங்களது ஆயுதப் படைகளை வெளியேற்றுவதாகவும், புரட்சிகர முன்னணி தங்களது வீரர்களின் ஆயுதங்களை களைவதாகவும் ஒத்துக் கொண்டன. அதில் இருந்து தன்னாட்சியை உருவாக்குவதற்கான வரைபடம் போடப்பட்டு, இருபது வருடங்களுக்குள் அதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படும் எனவும் ஒத்துக் கொள்ளப்பட்டது. இவற்றில் விளைந்த புத்திசாலித்தனமான நடவடிக்கைகளால் பொருளாதார வளத்தை பங்கு தரவும், சுதந்திரத்தை பெற்றுக் கொள்ளவும் போகன்வில் தயாராகிறது.

இங்கு நடை போட்ட விடுதலைப் போராளிகள், அரசியல் முன்னெடுப்பாளர்களிடையே கூட கருத்து மோதுதல்கள் இடம் பெறாமல் இருக்கவில்லை.

தொடர்ந்தும் இராணுவப் போராட்டங்களில் இருக்க வேண்டும் என்ற போகன்வில்லின் புரட்சிகர ராணுவ தலைவர் ஓனாவுடனான உறவுகளை முறித்துக் கொண்டு, மற்றைய தலைவர்களான கௌனா, கபூய் ஆகியோர் நியூசிலாந்து முன்னெடுத்த சமாதான பேச்சுக்களில் பங்கு பற்றி, ஜனவரி 1998 இல் லிங்கன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, இன்றைய சுதந்திர நாடாக ஆவதற்கு வழி வகுத்தனர்.

இவையும் சுயநிர்ணயத்துக்கான முன்னோடிகளாகவும் தமிழ் மக்களுக்கு இருந்த படிக்கட்டுகளாகவும் எடுத்துக்காட்டப்படுகின்றன.

(வளரும்)



போகன்வில்லின் சுதந்திரத்துக்கான வாக்கெடுப்பு

# மூன்று பகுதிகளாக வாகரை நிலங்களை பிரித்தெடுக்கும் முயற்சி இடம்பெறுகின்றது

## ஜனா எம்.பி. குற்றச்சாட்டு

(கல்லடி நிருபர்)

வாகரைப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட நிலங்களை மூன்று பகுதிகளால் பிரித்தெடுக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கு எதிராகத் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற மாவட்டத்தின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒருமித்துச் செயற்பட வேண்டும். அரசுடன் இணைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுதொடர்பில்எடுக்கும்நடவடிக்கைக்கு பூரண ஆதரவு வழங்கத் தயார் என நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தோணிதாண்டமடு பிரதேசத்தின் ஒரு பகுதி பொலன்னறுவை மாவட்டம் வெலிகந்தை பிரதேச செயலாளர் பிரிவினுள் இணைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனக் கிடைத்த தகவலையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் வாகரைப் பிரதேச செயலாளருடன் இது தொடர்பில் சந்திப்பை மேற்கொண்டிருந்தார். இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த சில நாள்களாக வாகரைப் பிரதேசத்தில் இருந்து தோணிதாண்டமடு என்கின்ற பிரதேசத்தின் ஒரு பகுதி பொலன்னறுவை மாவட்டத்துடன் இணைக்கப்படப் போவதாக தகவல்கள் வந்தன. அந்த வகையில் வாகரைப் பிரதேச செயலாளரைச் சந்தித்து இது விடயமாக கலந்துரையாடி விவரங்களைப் பெற்றுக் கொண்டேன். எல்லை நிர்ணய சபையால் வாகரைப் பிரதேசத்தில் நாங்கள் பாரியதொரு பிரச்சினையை எதிர்கொள்ள இருக்கிறோம் என அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

அதாவது வாகரைப் பிரதேசத்தில் இருந்து மூன்று பகுதியால் பிரதேசங்கள் பிரித்து எடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலாவதாக தோணிதாண்டமடு தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்தின் ஒரு பகுதி தமிழ் மக்களுடன் சேர்த்து வெலிகந்தை பிரதேசத்துடன் சேர்க்கப்பட இருப்பதாகவும், அதே போன்று ஓட்டமாவடி மத்தி பிரதேச செயலகப் பிரிவுடன் புணானை கிழக்கு, கிருமிச்சை, காயான்கேணி, வட்டவான் உள்ளிட்ட சில பிரதேசங்கள் இணைக்கப்படுவதற்கான முயற்சிகளும், மறுபக்கம் வடக்கிலே வெருகல் இரட்டை ஆற்றை ஒட்டிய பிரதேசம் வெருகல் பிரதேச செயலகத்துடன் இணைக்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன எனவும் அறிகின்றேன்.

மூன்று பக்கத்தால் வாகரைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களைப் பிரித்தெடுப்பதற்கான அழுத்தங்களைக் கொடுத்து ஒரு பகுதியையாவது முழுமையாகக் கைப்பற்றக்கூடிய முயற்சியாகவே நான் இதனைக் கருதுகின்றேன். அது ஓட்டமாவடி மத்தி பிரதேச செயலகத்துடன் காயான்கேணி, வட்டவான், புணானை கிழக்கு, கிருமிச்சை போன்ற பாரியதொரு நிலப்பரப்பை இணைத்து ஓட்டமாவடி மத்தி பிரதேச செயலகத்த வெலிகந்தை வரை விஸ்தரிப்பதற்கான செயற்பாடாகவே இதனைக் கருதுகின்றேன்.

அந்த வகையில் தமிழ்ப் பிரதேசம் என்பதற்கும் அப்பால் காலாகாலமாக வாகரைப் பிரதேச செயலக நிர்வாகத்துக்குட்பட்டு வாழும் மக்களும், நிலங்களும் வாகரைப் பிரதேச செயலகத்துடன் இருந்தவாறே இருக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருவர் அரசுடன் இணைந்திருக்கின்றார்கள். ஒருவர் கடந்த காலத்தில் இராஜாங்க அமைச்சராக இருந்தவர். தற்போதும் அப்பதவியை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றார். மற்றையவர் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்தவர். தமிழ் மக்களுக்காகப் போராடிய போராட்ட இயக்கத்தில் இருந்தவர். தற்போது இந்த அரசின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவராக இருக்கின்றார்.

இவர்கள் இந்த விடயத்தில் கூடுதலான கவனத்தைச் செலுத்த வேண்டும். தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள். குறிப்பாக முன்னாள் முதலமைச்சர் இந்தப் பிரதேசத்திலே இந்த மக்களின் கூடுதலான வாக்குகளைப் பெற்றவர். அவர் இந்த விடயத்திலே இன்னும் அதிகமான கவனம் செலுத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய எங்களைப் பொறுத்தமட்டில் நாங்கள் இந்த விடயத்துக்கு எதிராக எப்போதும் குரல் கொடுப்போம்.



என்னைப் பொறுத்தமட்டிலே இதற்கு ஒரே ஒரு தீர்வுதான் இருக்கின்றது. ஓட்டமாவடி மத்தி என்கின்ற பிரதேச செயலகப் பிரிவு நல்ல நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட பிரதேச செயலகமல்ல என நான் அறிகின்றேன். குறைந்த கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளுடன் ஒரு பிரதேச செயலகம் இருக்க வேண்டிய தேவையும் இல்லை. 7 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய ஓட்டமாவடி மத்தி பிரதேச செயலகத்தை ஓட்டமாவடி மேற்குப் பிரதேச செயலகத்துடன் இணைத்துவிட்டால் அவர்களுக்கான காணிப் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வு வரும் என்பதே என்னுடைய எண்ணப்பாடு.

எனவே நான்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த விடயத்தில் உறுதியாக இருக்க வேண்டும். குறிப்பாக மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும் இதில் மிகவும் உறுதியாக இருக்க வேண்டும். இந்த விடயத்தில் அவர்களுக்கு நாங்கள் என்றுமே பக்க துணையாக இருப்போம். வாகரைப் பிரதேசம் பிரிக்கப்படக் கூடாது. வாகரைப் பிரதேசம் சீரழிந்து போகக் கூடாது. அது இருந்த மாதிரியே அந்தப் பிரதேச செயலகத்தில் உள்ள மக்களும் அந்த நிலங்களும் அந்தப் பிரதேச செயலகத்தின் கீழேயே இருப்பதற்கு நாங்கள் அனைவருமாக ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

# நாட்டில் எரிபொருள் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண கட்டார் வலுச்சக்தி அதிகாரிகளுடன் காஞ்சன பேச்சு



இலங்கையின் எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வு காண்பது தொடர்பாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கட்டாரின் வலுசக்தி துறையின் முக்கிய அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

இது தொடர்பில் அவர் பதிவிட்டுள்ள டுவிட்டர் செய்தியில் –

கட்டார் நாட்டின் வலுசக்தி விவகார இராஜாங்க அமைச்சரும் கட்டார் வலு சக்தி நிறுவத்தின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சாட் ஷெரிடா அல் –காபியை சந்தித்து கலந்துரையாடினேன் எனத் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடியை சமாளிப்பதற்கு இலங்கைக்கு பெற்றோலியப் பொருள்கள், திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயு (எல்.பி.ஜி.) மற்றும் திரவ இயற்கை எரிவாயு (எல்.என்.ஜி.) என்பவற்றை வழங்குவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கட்டார் வலுசக்தி அமைச்சு மற்றும் கட்டார் அபிவிருத்தி நிதியத்தின் உதவியுடன் இலங்கையின் எரிபொருள் நெருக்கடியைச் சமாளிக்கும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட்டுடன் அமைச்சர் காஞ்சன விஜேசேகர 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை கட்டாருக்கு விஜயம் செய்தார்.

அமைச்சர் கட்டார் விஜயத்திற்கு முன்னர் நாட்டுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க உயர்மட்ட இராஜதந்திரிகள் குழுவுடனும் திங்கட்கிழமை விசேட சந்திப்பொன்றை முன்னெடுத்திருந்தார்.

மேற்படி சந்திப்பில், எரிபொருள் நெருக்கடி தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதோடு, அமெரிக்க அரசு மற்றும் ஏனைய அபிவிருத்தி நிறுவனங்களின் உதவியுடன் மின்சாரம் மற்றும் வலுசக்தி துறைகளை மேம்படுத்துவதற்கான நிலையான ஆற்றலைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# அனைத்து வாடிக்கையாளருக்கும் எரிபொருள் விநியோகிக்க முடிவு

## லங்கா ஐ.ஓ.சி. அதிரடி அறிவிப்பு

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். பெர்னாண்டோ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

டோக்கன் பெற்ற போதிலும், மறு அறிவித்தல் வரும் வரை எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு செல்ல வேண்டாம் எனவும் அவர் பொதுமக்களிடம் கோரியுள்ளார்.

மேலும், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் இருப்பு கிடைத்தவுடன், டோக்கன் வைத்திருப்பவர்களுக்கு அதன் இருப்பு தொடர்பாகத் தெரியப்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எரிபொருள் நிலையங்களுக்கான எரிபொருள் விநியோக நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொலன்னாவை பெற்றோலிய எண்ணெய் களஞ்சியசாலையால் இது தொடர்பாக அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகம் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையங்கள் அத்தியாவசியமற்ற சேவை வாகனங்களுக்கான எரிபொருளை தொடர்ந்து விநியோகிக்கும் என அதன் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், அதன் எரிபொருள் நிலையங்கள் 'டோக்கன் முறை' மூலம் செயற்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் எரிபொருள் கிடைக்கப்பெற்றதும், எரிபொருளைப் பெற விரும்பும் வாடிக்கையாளரை இராணுவம் தொலைபேசியில் அழைத்து பேசுவார்கள் எனவும், டோக்கன் முறை ஏற்கனவே நடைமுறையில் உள்ளது.

இதனை செய்ய, வாடிக்கையாளர் முதலில் டோக்கனைப் பெற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிபொருளை உற்பத்தி செய்யும் நாடுகளின் நிறுவனங்கள் இலங்கையில் எரிபொருளை இறக்குமதி செய்யவும், சில்லறை விற்பனையில் ஈடுபடுவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர முன்வைத்த யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டில் எரிபொருளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.06.2022இல் வெளியிடப்பெற்றது.